# அரியலூர் மாவட்டம், செந்துறையில் சட்டப்பிரச்சனைகளுக்கு தீர்வு காணும் சிறப்பு முகாம் முதன்மை மாவட்ட நீதிபதி திருமதி.எம்.டி.சுமதி அவர்கள் தலைமையில், மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.மு.விஜயலட்சுமி, இ.ஆ.ப., அவர்கள் முன்னிலையில் நடைபெற்றது.

அரியலூர் மாவட்டம், செந்துறை வட்டார வளர்ச்சி அலுவலகத்தில் அரியலூர் மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழு, ஜெயங்கொண்டம் வட்ட சட்டப்பணிகள் குழு மற்றும் மாவட்ட நிர்வாகம் இணைந்து அரசு நலத்திட்டம் மற்றும் சட்டப்பிரச்சனைகளுக்கு தீர்வு காணும் சிறப்பு முகாம் மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழுத்தலைவர் மற்றும் முதன்மை மாவட்ட நீதிபதி **திருமதி.எம்.டி.சுமதி** அவர்கள் தலைமையில், மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.மு.விஜயலட்சுமி, இ.ஆ.ப.,** அவர்கள் முன்னிலையில், இன்று (28.02.2018) நடைபெற்றது.

முன்னதாக, அனைத்துத்துறை சார்பில் அரசின் திட்டங்களை பொதுமக்கள் எளிதில் அறிந்துகொள்ளும் வகையில் அமைக்கப்பட்டிருந்த கண்காட்சி அரங்குகளை பார்வையிட்டனர்.

**இந்நிகழ்ச்சியில், மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழுத்தலைவர் மற்றும் முதன்மை மாவட்ட நீதிபதி பேசியதாவது :-**

அரியலூர் மாவட்டத்தில் மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழுவும், மாவட்ட நிர்வாகத்துறையும் இணைந்து அரசின் நலத்திட்டங்கள் மற்றும் சட்ட ஆலோசனைக்கான சிறப்பு முகாம் உச்சநீதிமன்றம் மற்றும் உயர்நீதிமன்றம் உத்தரவிற்கிணங்க, இம்முகாம் நடத்தப்பட்டு வருகிறது.

நீதிமன்றங்களில் வழக்குகளை குறைத்திடும் நோக்கத்திலும், அரசுத்துறை சார்ந்த திட்டங்கள் அனைவருக்கும் கிடைத்திடும் நோக்கத்தில் இம்முகாம்கள் நடத்தப்பட்டு வருகிறது. நீதிமன்றங்கள் சட்டப்பிரச்சனைகள் மட்டும் அல்லாமல், அரசுத்துறைச் சார்ந்த கோரிக்கைகள் மனுக்கள் மீது நடவடிக்கை எடுப்பதற்காகவும், சட்டத்துறையும், மாவட்ட நிர்வாகமும் இணைந்து, பொதுமக்களுக்கு உதவும் நோக்கில் இம்முகாம் நடத்தப்பட்டு வருகிறது.

சட்டப்பணிகள் ஆய்வுக்குழு வழக்குகளை நடத்த இயலாத பொதுமக்களுக்கு இலவசமாக சட்ட ஆலோசனை மற்றும் வழக்குகளை நடத்தும் பணிகள் செய்து வருகிறது. சுமுகமான முறையில் வழக்குகளை உடனடியாக தீர்த்து வைக்கவும் உதவுகிறது. இம்முகாமில் பொதுமக்கள் அளித்த கோரிக்கை 70 மனுக்கள் மீது சம்மந்தப்பட்ட துறை அலுவலர்களிடம் அனுப்பப்பட்டு, அம்மனுக்கள் மீது உடனடி நடவடிக்கைகள் மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

எனவே, இதுபோன்ற முகாம்களை பொதுமக்கள் பயன்படுத்திக்கொண்டு பயன்பெறுமாறு மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழுத்தலைவர் மற்றும் முதன்மை மாவட்ட நீதிபதி **திருமதி.எம்.டி.சுமதி** அவர்கள் பேசினார்கள்.

**இந்நிகழ்ச்சியில், மாவட்ட ஆட்சியர் அவர்கள் பேசியதாவது :-**

தமிழக அரசின் சார்பில் பொதுமக்கள் தொடர்பு முகாம், அம்மா திட்ட முகாம், எரிவாயு நுகர்வோர் குறைதீர்க்கும் கூட்டம் ஆகிய முகாம்கள் நடத்தப்பட்டாலும், இன்று சட்டத்துறை மற்றும் காவல்துறை, மாவட்ட நிர்வாகத்துறை சார்பில் பொதுமக்களுக்கு சட்ட ஆலோசனைகள், நலத்திட்ட உதவிகள் வழங்கப்படுவதால், இம்முகாம் சிறப்பு வாய்ந்ததாக அமைகிறது.

இம்மாதிரி முகாம்கள் கிராமங்களில் நடைபெறுவதால், கிராமப்புற மக்கள் அரசின் நலத்திட்டங்கள் தெரிந்துகொள்வதோடு, சட்டத்துறை சார்பில் வழக்குகளிலிருந்து எவ்வாறு விடுபடுவது, வழக்குகள் தொடர்பான இலவச சட்ட ஆலோசனைகளை தெரிந்துகொள்வதற்காக இம்முகாம் மிகவும் பயன் உள்ளதாக இருக்கும்.

வழக்குகளை குறைத்திடும் நோக்கில், வழக்குகளை நீதிமன்றங்களுக்கு வராமல் தடுப்பதே, இம்முகாமின் முக்கிய நோக்கமாகும். சிறு, சிறு பிரச்சனைகளை ஏற்றதாழ்வு பார்க்காமல் சமாதான முறையில் பொதுமக்கள் தீர்த்துக்கொள்ள வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.மு.விஜயலட்சுமி, இ.ஆ.ப.,** அவர்கள் பேசினார்கள்.

முன்னதாக, செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம் சார்பில் அதிநவீன மின்னணு விளம்பரத்திரை வாகனம் மூலம் தமிழக அரசின் சாதனைகள் மற்றும் திட்டங்கள் மற்றும் சட்ட விழிப்புணர்வு குறும்படங்கள் குறித்து படக்காட்சிகள் காண்பிக்கப்பட்டதை பார்வையிட்டனர்.

இந்நிகழ்ச்சியில், வருவாய்த்துறையின் சார்பில் 39 நபர்களுக்கு வாரிசு சான்றிதழ்கள், பட்டா மாற்றம், முதியோர் உதவித்தொகை, பட்டா உட்பிரிவு மாற்றம், நத்தம் பட்டா நகல்களையும், வேளாண்மைத்துறையின் சார்பில் 5 பயனாளிகளுக்கு மண்வள அட்டை, பைப்லைன், தெளிப்புநீர் பாசன கருவிகளையும், தோட்டக்கலைத்ததுறையின் சார்பில் 5 நபர்களுக்கு சொட்டுநீர் பாசன கருவி, சோலார் லைட், மாடித்தோட்ட விதைகளையும், ஊரக வளர்ச்சித்துறையின் சார்பில் பாரத பிரதம மந்திரியின் வீடு வழங்கும் திட்த்தின்கீழ் 20 நபர்களுக்கு வீடு கட்டுவதற்கு ஆணைகளையும், மாகத்மா காந்தி ஊரக வேலைவாய்ப்பு திட்டத்தின்கீழ் 11 பயனாளிகளுக்கு வரப்பு அமைத்தல் பணி ஆணைகளையும், மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் சார்பில் 1 நபர்களுக்கு நவீன செயற்கை காலினையும் என ஆகமொத்தம் 81 பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழுத்தலைவர் மற்றும் முதன்மை மாவட்ட நீதிபதி **திருமதி.எம்.டி.சுமதி** அவர்கள், மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.மு.விஜயலட்சுமி, இ.ஆ.ப.,** அவர்கள் வழங்கினார்கள்.

இந்நிகழ்ச்சியில், மாவட்ட வருவாய் அலுவலர் சே.தனசேகரன், தலைமை குற்றவியல் நீதிபதி ஏ.எஸ்.ரவி, ஜெயங்கொண்டம் வட்ட சட்டப்பணிக்குழு தலைவர் / மாவட்ட உரிமையியல் நீதிபதி ஆர்.பாரதிராஜா, உடையார்பாளையம் கோட்டாட்சியர் ஜோதி, அரியலூர் வழக்கறிஞர்கள் சங்க தலைவர் என்.எஸ்.ஜெயக்குமார், நியூ பார் அசோசியேசன் தலைவர் ஆர்.முருகன் மற்றும் வழக்கறிஞர்கள், அனைத்துத்துறை அலுவலர்கள், ஏராளமான பொதுமக்கள் கலந்துகொண்டனர்.

முன்னதாக, மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழு செயலாளர் / சார்பு நீதிபதி பி.சரவணன், அனைவரையும் வரவேற்றார். முடிவில், வழக்கறிஞர் என்.எஸ்.இதயராஜன் நன்றியுரையாற்றினார்.

செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.